தான் புஞ்சை சாகுபடி செய்கின்றன. மற்ற இடங்களில் இடம் விட்டு இடம் தள்ளி விவசாயம் செய்யப்படுகிறது. அவர்களின் தேவைக்கேற்பத்தான் அந்தப் பகுதிகளில் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவர் அவர்களே, அணையிலே தற்போது தண்ணீர் நிரம்பியிருக்கிறது. இப்படி நிரம்பியிருக்கிற நேரத்திலேயே, ஆரம்பக் காலத்திலேயே கடைசிப்பகுதியான கிராமங்களுக்கு தண்ணீர செல்லவில்லை என்றால், ஏப்ரல், மே மாதங்களில் எப்படி தண்ணீர் போய்ச் சேரும் - அந்தப்பகுதி மக்கள் எப்படி பயிர் செய்வார்கள். தற்போது இருக்கும் இந்த நிலைமையை மாற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவாகளே, சாத்தனூர் இடதுகரை கால்வாய் சம்பந்தப்பட்ட அந்தப் பகுதிகளில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் பதிவு செய்யப்பட்ட ஆயக் கட்டுகளாக அந்த நிலங்கள் இருக்குமேயானால், நிச்சயமாக தண்ணீர் கொடுப்பதற்கு அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்.

மதிப்பீட்டுக் குழு.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக 7-வது சட்டமன்றப் பேரவையின் மதிப் பீட்டுக் குழுத் தலைவன் என்ற முறையில் பொது நூலகங்கள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றி மேற்படி குழுவின் ஒன்பதாவது அறிக்கையையும்;

பொதுத் துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகிற விருந்தினர் இல்லங்கள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து, மேற்படி குழுவின் பத்தாவது அறிக்கையையும் நான் பேரவைக்கு அளிக்கிறேன்.